DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

| | | |
|---|---|---|
| Miscellaneous | : | **C.C.No. 283 /2025** |
| Deposition of witness for | : | PW. 1 |
| Name | : | கவிதா |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day November of 2025

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–**

எனது ஊருக்கும் எதிரியின் ஊருக்கும் சுமார் 2 கி.மீ துாரம் இருக்கும். நான் காரியாபட்டியில் யூனியன் ஆபிஸில் வேலை பார்த்தேன். எதிரி மாங்குளத்தில் பிரிஸிடன்டாக இருப்பதால் எனக்கு அவரை தெரியும். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் பணிதள பொறுப்பாளராக இருக்கிறேன். நான் மேலே கூறிய வேலை அரசாங்க வேலையா என்றால் அது அரசு வேலை தான். எதிரியின் மாங்குளம் அதிகார வரம்பில் நான் வேலை பார்க்கும் யூனியன் கட்டுபடாது என்றால் சரிதான். நான் யூனியன் ஆபிஸில் வேலை பார்த்த விபரத்தை மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். எதிரி எப்போது என்னிடம் பணம் கேட்டால் என்றால் 02.01.2024 ம் தேதி என்னிடம் பணம் கேட்டார். நான் பணத்தை 04.01.2024 ல் கொடுத்தேன். 2 நாட்களில் 20 லட்சம் ரூபாயை எதிரியிடம் கொடுத்தேன். எவ்வாறு என்னிடம் 20 லட்சம் வந்தது என்றால்

செய்முறை காசு கொஞ்சம் வந்தது, மீதி பணம் நான் சம்பாதித்து சேமித்த தொகையாகும்.

செய்முறை பணம் எவ்வளவு என்றும், நான் சம்பாதித்த தொகை எவ்வளவு என்றும் நான் குறிப்பிட்டு மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். 2023 ல் நான் எனது குழந்தைக்கு நீராட்டு விழாவில் வைத்து அதில் செய்முறை காசு வந்தது. அந்த கணக்கு வழக்குகளை பார்த்தால் தான் எவ்வளவு பணம் வந்தது என்பது தெரியும் என்றால் சரிதான். எனது குழந்தைக்கு தற்போது திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். நீராட்டு விழா வைத்து முடித்த மறுநாள் திருமண வைத்துவிட்டோம். நான் வழக்கிற்காக பொய்யாக எனது மகளுக்கு திருமண முடிந்த சிறிது காலத்திற்கு எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்று கூறினேன் என்றாலும் என்னிடம் அவ்வளவு தொகை இருந்திருக்க வாய்ப்பில்லை என்றாலும் எதிரி பழிவாங்கும் நோக்கத்துடன் சொன்னேன் என்றால் சரியல்ல. காசோலையை வங்கியில் செலுத்தும் போது கொடுக்கும்போது சலானை நான் நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதலில் ஆவியூர் எஸ்.பி.ஐ வங்கியில் காசோலையை கொடுத்தேன் என்றால் சரிதான். அவர்கள் தான் காரியாபட்டியிலுள்ள எஸ்.பி.ஐ வங்கியில் காசோலையை கொடுக்கும்படி கூறினார்கள். காரியாபட்டி எஸ்.பி.ஐ வங்கியில் எனக்கு சேமிப்பு கணக்கு இல்லை என்றால் சரிதான்.

நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எதிரியை எத்தனை வருடங்கள் எனக்கு தெரியும் என்று எனது மனுவில் நான் கூறவில்லை என்றால் சரிதான். நான் வருமான வரி எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் நான் கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.4 ஆவணத்தில் மணிகண்டன் கையெழுத்து காணப்படவில்லை என்றால் சரிதான். எனது கணவர் கொத்தனார் வேலை செய்து வருகிறார். எனது கணவர் எதிரி மீது புகார் அளித்த விபரம் தெரியும் என்றால் எனது கணவர் புகார் அளிக்கவில்லை நான் தான் எதிரி மீது ஆவியூர் காவல் நிலையத்தில் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக புகார் அளித்தேன்.

எனது கணவர் என்னை எத்தனை வருடம் பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்றால் எதிரிக்கு பணம் கொடுத்த விபரம் தெரிந்தவுடன் எனது கணவர் என்னை பிரிந்து வாழ்ந்து வருகிறார். நான் வழக்கிற்காக பொய்யாக கூறிகிறேன் என்றும், எனது கணவர் என்னை பிரிந்து 8 வருடங்களாக வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது கணவரும் நானும் ஒரே ஊர் என்றால் சரிதான். எனக்கு ஒரு நாள் சம்பளம் எவ்வளவு என்றால் ரூ.319/– ஆகும், மேற்படி பணம் எனது வங்கி கணக்கில் ஏறிவிடும். நான் எத்தனை வருடங்களாக வேலை பார்த்து வருகிறேன் என்றால் 7 வருடங்களாக வேலை பார்த்து வருகிறேன்.

நான் வருடத்தில் 100 நாட்கள் மட்டும் தான் வேலை பார்ப்பேன் என்றால் சரியல்ல, 365 நாள் வேலை இருக்கும் நான் ஞாயிற்று கிழமை மட்டும் தான் வேலைக்கு செல்ல மாட்டேன். எதிரியின் குடும்பத்தினர் யார் யார் என்ற விபரத்தினை எனது மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். எனது கணவர் முத்தூட் பைனான்ஸிஸ் இருந்து நகையை திருப்பிய விபரம் தெரியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எதிரியை நான் வாரத்தில் சுமார் 4 முறை யூனியன் ஆபிஸ் அலுவலகத்தில் பார்ப்பேன். 2021ம் ஆண்டு முதல் எதிரியை எனக்கு தெரியும். எனக்கு 20 லட்சம் ரூபாயை கொடுப்பத்திற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பணம் கொடுத்த போது சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரிதான். நான் எனது கணக்கு வழக்குள்ள ஆவியூர் கிளையில் காசோலையை தாக்கல் செய்யவில்லை என்பதால் தான் காசோலையை கொடுத்தத்திற்கான ஆவணம் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் காசோலையை என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் எதிரி பஞ்சாயத்து பிரிஸிடன்ட் என்பதால் அவர் மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

செய்முறை எவ்வளவு வந்தது என்று எழுதி வைத்த ஆவணத்தை பார்த்தாலும், என்னுடைய வங்கி கிளையிலுள்ள கணக்கு வழக்குகளை பார்த்தால் தான் உண்மையிலேயே எனக்கு ரூ.20 லட்சம் கொடுப்பதற்கு